சொல்லிவிட்டீர்கள். தகவல் வரட்டும். மாண்புமிகு அமைச்சரிடம் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதுசம்பந்தமாக விடை வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, திரு. பிரின்ஸ், நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு)

***திரு. ஜெ. அன்பழகன்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகம் எங்கும் 3–வது நாளாக சினிமா தியேட்டர்கள் மூடப்பட்டுள்ளன. கேளிக்கை வரிகள் உயர்த்தியது குறித்தும். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இதற்கு நேற்றே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நேற்றே, நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்டு சென்றுவிட்டீர்கள். அதற்குப் பிறகு, அவையில் பேசி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் சொல்வது அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள்.*

3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்குதல், எர்ணாவூரில் வீட்டு வசதி வாரியம்மூலம் வீடுகள் கட்டுதல், பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு மாநில அரசின் மானியம், நகரமைப்பு வல்லுநர்களுக்கான பணித் தொகுப்பு மற்றும் பணி விதிகள் உருவாக்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–ன்படி, மாநிலம் முழுவதற்கும் உயர்தர உள்கட்டமைப்பை வழங்குவது, போதுமான வீட்டு வசதித் திட்டங்களை நிறைவேற்றி, தமிழ்நாட்டை 2023–க்குள் குடிசைகளற்ற மாநிலமாக உருவாக்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்*

2017 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கடந்த 6 ஆண்டுகளாக பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் இந்த அரசு, பின்வரும் புதிய திட்டங்களைச் செயல்படுத்தும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1. தமிழ்நாடு அரசு ஒரு புதிய குடியிருப்பு மற்றும் உறைவிடக் கொள்கை உருவாக்கும். வீடு கட்டும் செலவினத்தைக் குறைத்தல், பொருளாதாரத்தில் நலிவடைந்த மற்றும் குறைந்த வருவாய் பிரிவினரை உள்ளடக்கிய அனைவருக்கும் போதுமான வீட்டு வசதியினைக் கிடைக்கச் செய்தல், வாங்கத்தக்க விலையில் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த வீடுகள் கட்ட இடம் ஒதுக்கீடு செய்தல், அனைவருக்கும் அடிப்படை வசதிகளான மின்சாரம், குடிநீர் மற்றும் சாலை வசதிகளுடன்கூடிய வீடு வழங்குதலை உறுதி செய்தல், நகர்ப்புற மக்களின் மாறிவரும் சமூகப் பொருளாதார நிலையினைக் கருத்தில்கொண்டு, நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், நீடித்த நிலையான சுற்றுச்சூழல் சார்ந்த வாழ்க்கை முறையினை நகர்ப்புறங்களில் உறுதி செய்தல், நிலையான நகரமயமாக்குதலை ஊக்குவித்தல், சட்டம் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளில் பொருத்தமான திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல், பெருந்திட்டங்கள் (*Master Plan*) மற்றும் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (*Development Control Rules*) திருத்தங்கள் கொண்டுவருதல், ஒற்றைச் சாளர முறையை உருவாக்குதல், மனை வரைபடம் ஒப்புதல் மற்றும் கட்டட அனுமதி பெற காலக்கெடு நிர்ணயித்தல், மூத்த குடிமக்கள் மற்றும் பணிபுரியும் பெண்கள் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு வீடுகள் கட்டுதல் மற்றும் அதற்குரிய உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், இடரற்ற வாடகை வீடு வழங்கும் முறையினை உருவாக்குதல் போன்றவை இக்கொள்கையின் சிறப்பம்சங்களாகும்.*

*2. பிரதம மந்திரி வீட்டு வசதித் திட்ட நிதி (*PMAY*), சிறப்பு மாற்றத்தக்க வளர்ச்சி உரிமைச் சான்றிதழ் (*Transferable Development Rights*) மூலம் திரட்டப்படும் நிதி, பயனாளிகளின் பங்களிப்புத் தொகை மற்றும் தமிழக அரசால் அளிக்கப்படும் பற்றாக்குறை நிதி (*Gap Fund*) ஆகியவற்றைப் பயன்படுத்தி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம், எர்ணாவூரில் 676 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 6,874 வீடுகள் குடிசைப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி][2017 ஜூலை 5

3. பிரதம மந்திரியின் அனைவருக்கும் வீட்டு வசதித் (PMAY-Urban) திட்டத்தில் பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் (Beneficiary Led Construction) வகைப்பாட்டின்கீழ், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1,86,308 தனி வீடுகள் 5 ஆயிரத்து 589 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நடப்பாண்டில் பயனாளிகள் பங்களிப்புடன் வாங்கும் திறனுக்கேற்ற வீடுகள் கட்டும் (Affordable Housing in Partnership Component) வகைப்பாட்டின்கீழ், ஒரு குடியிருப்பு 10 இலட்சம் ரூபாய் வீதம் 14,828 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 1,482 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கண்ட இரண்டு வகைப்பாட்டின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளுக்கு மாநில அரசின் மானியமாக 2007 கோடியே 53 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

முற்பகல் 11–50

4. திட்டமிட்ட மற்றும் நீடித்த நிலையான நகர் வளர்ச்சி ஏற்படுத்திட நிலப் பயன்பாடு குறித்து திட்டமிடுதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களை வகுத்தல், பாதுகாப்பு அம்சங்களுடன் வசிக்குமிடங்கள் ஏற்படுத்துதல், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு, போக்குவரத்து போன்ற தேவைகளை அறிந்து சிறப்பான தீர்வுகளைப் பரிந்துரைக்க, தகுதி பெற்ற தனிச் சிறப்புடைய நகரமைப்பு வல்லுநர்களைப் பணியில் ஈடுபடுத்துவது அவசியமாகிறது. நகரமைப்பு வல்லுநர்கள், மண்டல மற்றும் உள்ளூர் விதிமுறைகளை அறிந்து, மண்டலங்களுக்கு இடையேயான நகர வளர்ச்சி குறித்த அம்சங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகளை மேற்கொள்ள வேண்டும். இதற்காக மாநில அளவில் நகரமைப்பு வல்லுநர்களுக்கான ஒரு பணித் தொகுப்பினை உருவாக்கி, அதற்கென தனியாக பணிவிதிகள் உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணித் தொகுப்பிலுள்ள நகரமைப்பு வல்லுநர்கள், நகர் ஊரமைப்புத் துறை, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாற்றுப் பணி அடிப்படையில் பணியமர்த்தப்படுவர். நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஆணையாளர் பணிநிலை கட்டுப்பாட்டு தகவாளராக இருப்பார்.